## மதமாற்ற பள்ளிகளை எதிர்த்து புதுபள்ளிகள் துவங்கியதில் இந்து முன்னணியின் பங்களிப்பு

- தூத்துக்குடியில் கிருஸ்தவர்களின் அட்டகாசத்தால் பள்ளிக்கு வரும் குழந்தைகள் பொட்டுவைக்கக் கூடாது, பூவைக்கக்கூடாது என்னும் பிரச்சனை ஏற்பட்டபோது, வேப்பங்காட்டில் ஒரு பள்ளிதுவக்கப்பட்டது. இன்று அப்பள்ளி பெருமளவில் முன்னேற்றம் அடைந்துள்ளது. அது போல் உடன்குடியில் ஒரு பெரியபள்ளியை துவக்க நேர்ந்தது, ஒரே நாளில் 1300 பிள்ளைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட பள்ளி இது. தமிழக வரலாற்றில் இதுபோல் வேறெங்கும் பள்ளி ஆரம்பித்து இருக்க மாட்டார்கள், கிருஸ்தவபள்ளி அட்டகாசத்தை எதிர்த்து பஸ்மறியல், சாகும்வரை உண்ணாவிரதம் போன்றவை நடத்தியுள்ளோம். இதில் நமக்கு பெரியவெற்றி கிடைத்துள்ளது. மக்கள் ஆதரவு பெருகியுள்ளது. இன்று அப்பள்ளி இராமகிருஷ்ணா தபோவனத்தின் கீழ் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. 1983-84-ல் தூத்துக்குடி மாவட்டத்தில் இதே போல் 10 பள்ளிகள் ஆரம்பிக்கபட்டன இவற்றின் செயல்பாட்டின் வெற்றியில் **இந்து முன்னணி**யின் பெரும் பங்களிப்பு உள்ளது குறிப்பிடத்தக்கது.

## செஞ்சி கோவில் மீட்பு

- விழுப்புரம் மாவட்டம் செஞ்சியிலுள்ள கோதண்டராமர் கோவிலும் அதை சுற்றியுள்ள இடங்களும் எங்களுக்கே சொந்தம் எனகூறி கிருஸ்தவபாதிரி ஆக்கரமிப்பு செய்தார். இந்து முன்னணி தொடர்ந்து பலவித போராட்டங்களை நடத்தியதும் தாசில்தார் நேரடியாக வந்து பத்திரிக்கையாளர் முன்னிலையில் இந்து முன்னணி பொருப்பாளர்களிடம் கோயில் சாவியை ஒப்படைத்தார். இது **இந்து முன்னணி** வரலாற்றில் ஓர் நல்முத்தாக அமைந்துள்ளது.

# காயிதே மில்லத் பெயர் வைக்க எதிர்ப்பு

- 1989ல் திண்டுக்கல் மாவட்டத்திற்கும் 1991ல் நாகைமாவட்டத்திற்கும் தேச விரோதி காயிதே மில்லத் பெயர் சூட்டப்பட்டது. **இந்து முன்னணி**யின் எதிர்ப்பு பிரச்சாரமும் கடுமையான போராட்டமும் நடந்தது. திண்டுக்கல் போராட்டத்தில் சின்னாளபட்டி நாகராஜும், நாகை போராட்டத்தில் முருகன் என்பவரும் பலியானார்கள், போராட்டங்கள் மேலும் தீவிரமானது. அரசு பணிந்தது காயிதே மில்லத் பெயர் எடுக்கப்பட்டது மட்டுமின்றி இனி எங்கும் தேச விரோதி காயிதே மில்லத்தின் பெயர் வைக்கக்கூடாது எனவும் முடிவு அறிவிக்கப்பட்டது.

# திரைப்படத் துறையில் இந்து இழிவு பிரச்சாரங்கள் முறியடிப்பு

- ரஜினிகாந்த் நடித்த எஜமான் திரைப்படம் ஏ.வி.எம் தயாரிப்பில் உருவானது. இப்படத்தின் காட்சியில் பகவத்கீதையை தலைகீழாக படிப்பது போல் கையில் பிடித்துக்கொண்டு வேலைக்கார பெண்ணிடம் தவறாக நடப்பது போன்ற காட்சி வெளியானது. இந்துமுன்னணி எதிர்ப்பு தெரிவித்தது. ஏ.வி.எம் உரிமையாளர் நமது பொறுப்பாளர்களை அழைத்து அக்காட்சியை ரத்து செய்ய மனமுவந்து ஒப்புக்கொண்டார். மேலும் இந்து முன்னணிக்கு நன்றி தெரிவித்து பத்திரிக்கையில் அரைப்பக்க விளம்பரமும் தந்திருந்தார்.

- சமீபத்தில் வெளிவந்துள்ள மன்மதன்அம்பு திரைப்படம் கமலஹாசன் நடித்து, கே.எஸ்.ரவிக்குமார் இயக்கத்தில் உருவானது. அதிலுள்ள பாடல் வரிகளில் இந்துகடவுளை இழிவாக சித்தரித்திருந்தது. கமலஹாசன் வீட்டுமுன் ஆர்ப்பாட்டம் நடத்தினோம், உடனே கமலஹாசன் வீட்டினுள் அழைத்து சென்று திரைப்பட இயக்குநர் கே.எஸ்.இரவிக்குமார் அவர்களையும் அழைத்து பேசி வருத்தம் தெரிவித்தார்கள், அந்த பாடல் வரிகளையும் நீக்கவும் சம்மதம் தெரிவித்தனர்.

இது போன்ற ஏராளமான ஊடகங்களில் இந்து இழிவு பிரச்சாரத்தை முறியடிக்க போராடியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# ஓடாத தேர் ஓட்டியது

➢ திருவாரூரில் ஆழித்தேர் உள்ளது. இது பல காலம் ஓடாதிருந்தது. இது பக்கதர்களின் மனதில் பெரும் வேதனையை ஏற்படுத்தியிருந்தது! இந்துக்களுக்காக வாதாடி, போராடும், இந்துமுன்னணி தேரை ஓட்டமுடிவு செய்தது. பட்டி தொட்டி, குடிசைப்பகுதிகளெல்லாம் சென்று மக்களுக்கு விபூதி, குங்குமம் கொடுத்து தேரிழுக்க வருமாறு அழைத்தனர். நம்பிக்கை இழந்து இது முடியாது என்றிருந்த இந்துக்களிடம் நம்பிக்கை எழுந்தது, இந்துக்கள் கூட்டம் கிளர்ந்து எழுந்தது. அரசும் அடிபணிந்து வந்தது! தேரோட்டம் நடக்க உதவவும் பலர் முன் வந்தனர். தேரோடும் நாள் வந்தது மக்கள் எதிர்பார்த்ததைவிட அதிக மக்கள் திரண்டனர். தேர் நகர்ந்தது வீதிவலம் வந்தது. பல நாட்கள் ஓடி தேர்நிலை வந்து சேரும் தேர், இப்பொழுது ஒன்றரை நாட்களிலே தேர் நிலை வந்தது. இந்து சக்தி வென்றது. மக்கள் இதயமெல்லாம் மலர்ந்தது! வரலாற்றில் பதிந்தது!!. இன்றும் நினைவில் நிற்பது!!!.

இது போல ஓடாமல் நின்றிருந்த நெல்லை தேரையும் ஓட்டிட பாடுபட்டது இந்து முன்னணி.

# டிசம்பர் 6 காவிக் கொடி ஆர்ப்பாட்டம்

➢ 1992-ல் பாபர் மசூதி எனும் கட்டிடம் இடிக்கப்பட்டது. அது முதல் தமிழகத்தில் டிசம்பர் 6ம் தேதி முஸ்லீம்கள் ஒப்பாரிதினமாக கடைபிடித்து வந்தனர். சில ஆண்டுகள் பொருத்து பார்த்த இந்து முன்னணி இவர்களுக்கு எதிர்ப்பு உருவாக்க முடிவு செய்யப்பட்டு டிசம்பர் 6 அன்று இந்து முன்னணியின் சார்பில், வெற்றி திருநாள், இந்து எழுச்சி தினம், இராமர் கோயில் கட்ட வலியுறுத்தி காவி கொடி ஆர்ப்பாட்டம் என எதிர்த்து நிகழ்ச்சி நடத்தப்பட்டது, நம்முடைய கருத்தும் நாடெங்கும் பரவியது! பல இடங்களில் நம்முடைய எதிர்ப்பின் விளைவால் அவர்களுடைய நிகழ்ச்சிகள் தடுக்கப்பட்டது! சில இடங்களில் கட்டுப்படுத்தி விட்டது.